
# நோயாளிக்குத

## தகவல்

## சிகிச்சை மருந்து:

# இதய நோய்கள்

டிகோக்ஸின்



Medicine To Treat: **Cardiac Diseases**

**Digoxin**

## இந்த மருந்து எதற்குப் பயன்படுத்தப்படுகிறது?

டிகோக்ஸின் படபடப்பான இதயத் துடிப்பு வேகத்தைச் சரிசெய்யப் பயன்படுத்தப்படுகிறது. இதயம் செயலிழந்த நிலையில் அதன் இயக்கத்தைத் தூண்டி மேம்படுத்தவும் அது பயன்படுத்தப்படுகிறது.

## இந்த மருந்தை நான் எப்படி உட்கொள்வது?

டிகோக்ஸினை வாய் வழியாக தண்ணீருடன் உட்கொள்ள வேண்டும். மருந்து ஒட்டு வில்லையில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றுங்கள். வழக்கமான நேரங்களில் முறையான அளவில் உட்கொள்ளுங்கள். எப்போதும் உணவுக்கு முன் அல்லது உணவுக்குப் பின் இம்மருந்தை உட்கொள்ளுங்கள்.

## உரிய நேரத்தில் மருந்தை உட்கொள்ள மறந்துவிட்டால் என்ன செய்ய வேண்டும்?

மருந்து உட்கொள்வதை தவறவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஒருலவேளை மருந்தை தவறவிட்டால் இயன்றவரை 12 மணி நேரத்திற்குள் உட்கொண்டு விடுங்கள். 12 மணி நேரத்திற்குப் பிறகு விடுபட்டதைச் சேர்க்க வேண்டாம். வழக்கமான இடைவெளியில் தொடர்ந்து அடுத்த வேளைக்குரியதை எடுத்துக்கொண்டால் போதும். இருமடங்கு மருந்தை உட்கொள்ள வேண்டாம். உங்கள் மருத்துவர் கூறினால் தவிர, நேர இடைவெளி விட்டு இருமடங்கு மருந்தை உட்கொள்ளாதீர்கள்.

## இம்மருந்தின் சாத்தியமான பக்கவிளைவுகள் யாவை?

பாதிக்கப்பட்ட இதயத் துடிப்பின் வேகத்தை டிகோக்ஸின் மேலும் மோசமாக்கும் அல்லது புதியதாக இயல்புக்கு மாறான இதயத் துடிப்பு பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்.

பொதுப்படையாக அனுபவிக்கக் கூடிய பாதகமான விளைவுகளில் கீழ்க்கண்டவை அடங்கும்:

- வயிற்றுப் போக்கு, குமட்டல், வாந்தி
- தலைவலி, தலைச் சுற்றல்
- பார்வைத் தொந்தரவுகள்

*குழந்தைகளுக்கு எட்டாத இடத்தில் மருந்துகளை வைத்திருங்கள்*

இந்த அறிகுறிகளில் ஏதேனும் ஏற்பட்டால் உடனடியாக உங்கள் மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கையை நான் எடுக்க வேண்டும்?

சில மருந்துகள் உங்கள் உடலிலுள்ள டிகோக்ஸின் அளவை பாதிக்கக்கூடியவை. அதனால் பாரம்பரிய நாட்டு மருந்துகளை அதனுடன் சேர்த்து ஒரே சமயத்தில் உட்கொள்வது நல்லது அல்ல. எந்த நோய்க்கும் ஆலோசனை நாடும் போது நீங்கள் டிகோக்ஸின் உட்கொள்ளுகிறீர்கள் என்று மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

கருவுற்ற பெண்கள் டிகோக்ஸின் மருந்தை உட்கொள்வது குறித்து போதுமான தகவல்கள் இல்லை. எனவே, கர்ப்ப காலத்தின் போது மிகவும் அவசியம் என்று தெரிந்தால் மட்டுமே இந்த மருந்தைப் பயன்படுத்த வேண்டும்.

டிகோக்ஸின் பாலில் கலந்துவிடக்கூடியது. பாலூட்டும் கைக்குழந்தைகளுக்கு கடுமையான பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சாத்தியத்தைக் கருதி, தாய்ப்பால் ஊட்டுவதை நிறுத்துவதா அல்லது இந்த மருந்தை நிறுத்திக் கொள்வதா என்பதை, நோயாளிக்கு இம்மருந்து எந்த அளவுக்கு அவசியம் என்பதன் அடிப்படையில், முடிவு செய்ய வேண்டும்.

உங்கள் மருத்துவர் சிகிச்சைக்குரிய தேவைகளை முடிவு செய்வதற்கு, உங்கள் இரத்தத்தில் உள்ள டிகோக்ஸின் அளவை இடைவெளி விட்டு பரிலசோதிக்கக் கூடும்.

## மருந்தை நான் சேமித்து வைப்பது எப்படி?

உங்கள் மருந்தை, வெளிச்சம் ஊடுருவாத கலத்தில் இறுக்கமாக மூடி, குளிர்ச்சியான உலர்ந்த இடங்களில் வைக்க வேண்டும்.

*காலாவதியான அல்லது இனியும் தேவைப்படாத மருந்துகளை ஒதுக்கி விடுங்கள்*

SingHealth Ministry Of Health National Healthcare Group

Printed in 2002